*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.1717/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-2)***

*Name / Father's Name:* ***திருமதி.நித்யா க/பெ. பிரபு***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **18.03.2026.**

**முதல் விசாரணை**

1) நான் தற்சமயம் கெங்கவல்லி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.09.2025 அன்று மாலை 04.00 மணியளவில் நானும், என்னுடன் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.ராமர் என்பவரும் காவல் உதவி ஆய்வாளர் திரு.கணேஷ்குமார் அவர்கள் தலைமையில், மதுவிலக்கு வேட்டை சம்மந்தமாக எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கெங்கவல்லி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட கெங்கவல்லி இந்திரா காலணியில் உள்ள எதிரியின் வீட்டின் அருகில் கண்காணித்து சென்றபொழுது, அங்கு ஒரு நபர் எங்களை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தோம்.

2) அப்போது அவர் அவரது பெயர் ராஜா (எ) கின்னி ராஜா த.பெ முத்துசாமி என்று கூறினார். பின்னர் எதிரி அவரிடமிருந்த சுமார் 180 ML அளவுகொண்ட Honey Day Brandy – 12 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்தார். அதனால் எதிரி ராஜா (எ) கின்னி ராஜா என்பவரை, காவல் உதவி ஆய்வாளர் அன்றைய தினமே கைது செய்தார்.

3) பின்பு சம்பவ இடத்தில் எதிரி எடுத்து ஆஜர் செய்த Honey Day Brandy – 12 பாட்டில்களை அந்த இடத்தில் பொதுநபர் சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன்வராத காரணத்தால் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில், காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகஜரில் உள்ள எனது 2-வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4) பின்பு கைப்பற்றிய வழக்கு சொத்தை சம்பவயிடத்திலேயே யாருக்கும் பயன்படா வண்ணம் காவல் உதவி ஆய்வாளர், எங்கள் முன்னிலையில் கீழே கொட்டி அழித்து அழித்தல் மகஜர் தயார் செய்தார். அழித்தல் மகஜரில் உள்ள 2–வது கையெழுத்து என்னுடையது தான். (**அழித்தல் மகஜரில் உள்ள எனது 2–வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பிறகு எதிரியின் மீது வழக்கு பதிவு செய்ய, காவல் ஆய்வாளருக்கு நானும் உதவியாக இருந்தேன். காவல் ஆய்வாளர், என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) நான் சொல்லும் சம்பவயிடமானது மக்கள் நடமாட்டமான பகுதி என்றால் சரிதான், ஆனால் நாங்கள் செல்லும் பொழுது அந்த இடத்தில் மக்கள் யாரும் இல்லை. தனிநபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இரசாயன பகுப்பாய்விற்காக ஏதேனும் மாதிரிகளை எடுத்து வைத்தோமா என்றால் இல்லை. என் முன்பாக சம்பவயிடத்தை காட்டக்கூடிய பார்வை மகஜரோ, மாதிரி வரைபடத்தையோ காவல் ஆய்வாளர் தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். கைப்பற்றியதாக சொல்லும் சாராயத்தை எங்கு அழித்தோம் என்றால் சம்பவயிடத்தில்தான் அழித்தோம்.

2) நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை பார்க்கவில்லை என்றும், எதிரியிடமிருந்து எந்த பாட்டில்களையும் கைப்பற்றவில்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரியின் மீது போடப்பட்ட பொய்யான வழக்கிற்காக, காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றும், வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், வழக்கிற்காக சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டதாக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.18 18:02:03 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.1717 / 2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-3)***

*Name / Father's Name:* ***திரு.கணேஷ்குமார் த/பெ. முருகேசன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **18.03.2026.**

**முதல் விசாரணை**

1) நான் தற்சமயம் கெங்கவல்லி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.09.2025 அன்று மாலை 04.00 மணியளவில் நானும், எனது தலைமையில் என்னுடன் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.ராமர் மற்றும் பெண் தலைமைக்காவலர் திருமதி.நித்யா ஆகியோர்களுடன் மதுவிலக்கு வேட்டை சம்மந்தமாக எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கெங்கவல்லி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட கெங்கவல்லி இந்திரா காலணியில் உள்ள எதிரியின் வீட்டின் அருகில் கண்காணித்து சென்றபொழுது, அங்கு ஒரு நபர் எங்களை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தோம்.

2) அப்போது அவர் அவரது பெயர் ராஜா (எ) கின்னி ராஜா த.பெ முத்துசாமி என்று கூறினார். பின்னர் எதிரி அவரிடமிருந்த சுமார் 180 ML அளவுகொண்ட Honey Day Brandy – 12 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்தார். அதனால் எதிரி ராஜா (எ) கின்னி ராஜா என்பவரை அன்றைய தினமே கைது செய்தேன்.

3) பின்பு சம்பவ இடத்தில் எதிரி எடுத்து ஆஜர் செய்த Honey Day Brandy – 12 பாட்டில்களை, அந்த இடத்தில் பொதுநபர் சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன்வராத காரணத்தால் என்னுடன் வந்த போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். (**கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4) பின்பு கைப்பற்றிய வழக்கு சொத்தை யாருக்கும் பயன்படா வண்ணம் மேற்படி போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்திலேயே கீழே கொட்டி அழித்து அழித்தல் மகஜர் தயார் செய்து, சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றேன். (**அழித்தல் மகஜர் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

5) பிறகு எதிரியை நிலையம் அழைத்து வந்து எதிரியின் மீது நிலைய குற்ற எண்.236/2025 சட்டப்பிரிவு 4(1)(C) of TNP (Amendment) Act 2024–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. சம்பவம் முதற்கட்ட விசாரணையில் உண்மையென தெரியவந்ததால் எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். பிறகு வழக்கு விசாரணையை முடித்து சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1) நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் மக்கள் வசிப்பிட பகுதி என்றால் துூரதுூரமாக வீடுகள் உள்ளன. தனிநபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ இடம் மக்கள் நடமாட்டமான பகுதி என்றால் சரிதான். சம்பவம் இடம் தொடர்பாக பார்வை மகஜர், மாதிரி வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) கைப்பற்றியதாக சொல்லப்படும் சாராயத்தை, அளந்து பார்த்தோமா என்றால் இல்லை, தோராயமாக கூறியுள்ளோம். இரசாயன பகுப்பாய்விற்காக ஏதேனும் மாதிரிகளை எடுத்து வைத்தோமா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்களை அழிக்க எனக்கு சட்டப்படி அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

3) நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை பார்க்கவில்லை என்றும், எதிரியிடமிருந்து எந்த

பொருளையும் கைப்பற்றவில்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரியின் மீது பொய்யாக வழக்கு பதியப்பட்டுள்ளது என்றும், வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், வழக்கிற்காக சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.18 18:02:12 +0530

Judicial Magistrate No.2, Attur.